RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-22298

# அளம், கற்றாழை புதினத்தில் புதினத்தில் ஆளுமை

சு. பரணி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா.

# Personality in Alam and Katralai Novel

S. Bharani [a, *]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-641 043. Tamil Nadu, India

* Corresponding Author: bharani_tam@avinuty.ac.in

Received: 17-09-2022
Revised: 05-11-2022
Accepted: 14-11-2022
Published: 05-12-2022

Check for updates

## ABSTRACT

Alaam and Katralai are two novels written by S. Tamilchelvi. A person's personality is formed by the influence of experiences, environment, education, society, culture, etc. which can be acquired from the birth till death. So personality itself is subject to change. Sundarampal and Manimegala are the heroines of the novels. After heroine's husband leaves, they becomes the one who carries the burden of the family and brings up the girl children in a good manner. The purpose of this article is to examine the nature and behavioral characteristics of these heroine's in a detailed way.

**Keywords:** Alaam, Katralai, Tamilchelvi, Personality

## முன்னுரை

பிறப்பு முதல் இறப்பு வரை பெறக்கூடிய அனுபவங்கள், சூழல்கள், கல்வி, சமூகம், பண்பாடு போன்றவற்றின் தாக்கத்தால் உருவானது ஒருவரின் ஆளுமை ஆகும். அதனால் ஆளுமைமே மாற்றத்துக்கு உட்பட்டது எனலாம். அளம், கற்றாழை புதினத்தில் மகளிரின் ஆளுமை எவ்வாறு உள்ளது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

Personality ஆங்கில சொல்லுக்கு நிகரான தமிழ் கலைச்சொல் ஆளுமை எனப்படும். நாடகத்தில் நடிக்கின்ற மாந்தர்கள் தங்கள் மேடையில் நடக்கும் கதை மாந்தருக்கு ஏற்ற வண்ணம் அணிந்திருப்பர். பர்ஸாணா (Farsona) என்று லத்தின் மொழியில் அழைக்கப்பெறும். Farsona என்ற சொல் அடியிலிருந்து தான் Personality என்ற ஆங்கிலச் சொல் உருவானது. ஒவ்வொரு மனிதருக்குள்ளும் தொடர்ந்து வரும் பரம்பரை சார்ந்த பண்புகள் மற்றும் சூழ்நிலையால் ஏற்படும் பண்புகள் என இரண்டும் கலந்து வெளிப்படும் பண்புகளை ஆளுமை என்றனர். மனிதர்களின் வெளித்தோற்றத்தை வைத்து வைத்தே அவனின் பண்பினைக் குறிக்கும் சொல்லிற்கு Pநசளழயெடவைல என்ற சொல் வழங்கி வருகிறது.

“மனிதனின் நனவிலி மனத்தின்று எழும் வலிமை வாய்ந்த இத் (ஐனு) என்கிற உள்ளச்சக்தி சமூகச் சூழ்நிலையில் சட்டதிட்டங்களோடும் கட்டுப்பாடுகளோடும் இழைவதினால் ஏற்படுவதே ஆளுமை"1 என்று கலைக்களஞ்சியம் கூறுகிறது (TVK, 1972). மேலும், “ஆளுமை என்பது அச்சம், சினம், பால் ஆகிய இயல்புகளை அடிப்படையாகக் கொண்டதாகும்" என்று நடத்தை கொள்கையினர் கூறுகின்றனர் (TVK, 1972). பேசுதல், எண்ணுதல், நேசித்தல், பார்த்தல் ஆகிய செயலை செய்கின்ற

முறையில் மனிதனின் ஆளுமை வெளிப்படுகின்றது என காரல்யுங் கூறுகிறார். அவர் மனித ஆளுமையை மனதின் அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கிறார். அவை ஒன்று அகமுகி மற்றொன்று புறமுகி ஆகும். அகமுகி என்போர் தன்னை மட்டும் சிந்திக்கக் கூடியவர் என்றும் புறமுகிகள் என்போர் எச்செயலையும் அனைவரிடமும் பகிர்ந்து கொள்ளும் திறந்த புத்தகமாக இருப்பார்கள் என்றும் கூறுகின்றார்.

ஷெல்டன் என்பவர் உடல்வாகு அடிப்படையில் ஆளுமையை இரண்டாகப் பிரிக்கிறார். ஹிப்போகிராட்ஸ் என்பவர் முகத்தின் அடிப்படையில் ஆளுமையை நான்கு வகையாகப் பிரிக்கின்றார். மனிதனின் ஆளுமைப் பண்பினை நிர்ணயிப்பதில் மனம் மட்டுமல்லாது சமூக காரணிகளும் பெரும்பங்கு வகிக்கின்றன என எரிக்சன் குறிப்பிடுகின்றார். இவர் மனிதன் குழந்தைப் பருவத்திலிருந்து பல்வேறு படிநிலைகளில் வளர்நிலை மாற்றங்களைத் தழுகின்றான். இவ்வளர்ச்சி உடல் நிலையிலும் மனதிலும் ஆளுமையிலும் சமுதாயத்திலும் வளர்ச்சியை ஏற்படுத்துகின்றது என கூறுகிறார் (Bharani, 2009). பொதுவாக, மனிதனின் வாழ்வியல் சூழலும், கற்ற கல்வியும், நட்பும் கொள்கைப் பிடிப்பும் ஒருவரின் ஆளுமையை நிர்ணயிக்கும் என்பதில் மிகையில்ல.

## முடிவெடுக்கும் திறன்

சமுதாயத்தில் தனி மனிதன் தன் வாழ்க்கையில் எந்த ஒரு சூழ்நிலையிலும் தன் வாழ்வாதாரம் உயர்வதற்கு சரியான தருணத்தில் தன்னம்பிக்கையுடன் வளர்ச்சியை நோக்கிச் செல்ல முடிவெடுக்க வேண்டும். சரியான நேரத்தில் சிறந்த முடிவெடுப்பதற்கு மனஉறுதியே மூல காரணமாகக் கருதப்படுகிறது.

அளம் புதினத்தில் சுந்தராம்பாளின் மூத்த மகளான வடிவாம்பாளுக்குத் திருமண வாழ்க்கை நிலைத்திருக்கவில்லை. கூலி வேலை செய்து தன் வாழ்க்கையே வீணாகிவிடும் என்று எண்ணி சொந்தமாக அளம் வாங்க முடிவெடுக்கிறாள். அளம் வாங்குவதற்குத் தனக்கென்று பிரித்து கொடுத்த நிலத்தை விற்க எண்ணும் போது சுந்தராம்பாள் தன் கணவனை எண்ணி பயம் கொள்கிறாள். ஆனால், பிடிவாதமாய் தன் பெரியப்பாவிடம் நிலத்தை விற்றுத் தருமாறு கூறுகிறாள்.

“மூணு மா நெலமும் சும்மா தான கெடக்கு. அதால ஒரு நெல்லுமொனக்கி புண்ணியமுண்டா? அதவித்துப்புட்டு அளத்த வாங்குனமுன்னா நம்மளுக்கு நல்லதுதான?” என்றாள் (Tamilselvi, 2014a). இப்புதினத்தில் வடிவாம்பாள் பிடிவாதமாக அளம் வாங்க நினைப்பது தான் மட்டும் அல்லாது தன் குடும்பமும் பயன் பெற்று, தங்கள் வாழ்வாதாரம் உயர்வதற்காக உரிய நேரத்தில் சரியான முடிவு எடுக்கக் கூடியவளாக வடிவாம்பாள் திகழ்கிறாள்.

சமூகத்தில் பெண்கள் சிக்கல்களை எதிர்கொள்ளும் போது, அதனைக் கண்டு அஞ்சாமல், அவற்றிலிருந்து விடுபட சரியான நேரத்தில் தன்னம்பிக்கையுடன் முடிவெடுக்க வேண்டும்.

## உறுதியான மனநிலை

உறுதியான மனநிலையே தவறுகள் அற்று செயல்பட உதவும். மனதில் உறுதியுடன் இருந்தால் வாழ்க்கையில் ஏற்படும் தோல்வியைக் கண்டு மனம் துவள மாட்டோம்.

அளம் புதினத்தில் சுந்தராம்பாளின் கணவன் சுப்பையன் வெளிநாட்டிற்கு வேலை பார்க்க சென்று திரும்பி வராத நிலையிலும் மனதில் உறுதியுடன் மீண்டும் கணவன் வந்து விடுவான் என தன் வாழ்க்கையை நடத்தினாள் சுந்தராம்பாள. தன் மூன்று பெண் குழந்தைகளையும் நன்றாக வளர்த்தாள். யாருடைய உதவியின்றியும் தனி ஆளாக நின்று குழந்தைகளை வளர்த்து அவர்களுக்கு திருமணமும் செய்தாள்.

திரும்பி வராத கணவனை நினைத்து வருத்தம் கொள்ளாமல், என்றைக்காவது ஒரு நாள் திரும்பி வருவான் என்ற மனஉறுதியுடன் வாழ்க்கை நடத்தினாள்.

"மனதில் உறுதி வேண்டும்" என்ற பாரதியின் சொல்லுக்கிணங்க சமூகத்தில் ஆண்களால் கைவிடப்பட்ட பெண்கள் உறுதியான மனநிலையுடன் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதனை இக்காதா பாத்திரம் உணர்த்துகின்றது.

## தன்மானம்

ஒருவர் தன் மீது கொண்டிருக்கும் மதிப்புத் தன்மானம் எனப்படும்.

"மயிர்நீப்பின் உயிர்வாழாக் கவரிமா அன்னார்

உயிர்நீப்பர் மானம் வரின்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க அளம் புதினத்தில் சுந்தராம்பாளின் இரண்டாவது மகளான ராஜhம்பாள் வேதப்பனைத் திருமணம் செய்து கொண்டு இரண்டு குழந்தைகளுடன் சந்தோசமாக வாழ்க்கை நடத்துகிறார்கள். இரண்டு குழந்தைகள் பிறக்கும்வரை வேதப்பன் தன் மனைவியிடமும், அவள் குடும்பத்திடமும் நல்லவனாக இருந்தான். பிறகு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு கொண்டு ராஜhம்பாளைத் துன்புறுத்தினான். பொறுத்துப் பார்த்த ராஜhம்பாள் தனக்கு துரோகம் செய்த கணவனை விட்டு செல்ல முடிவெடுக்கிறாள். கலங்கமில்லா மனத்துடன் தன் குழந்தைகளுடன் தாயார் வீட்டிற்கு சென்று விடுகிறாள்.

"பிள்ளைபெற்ற இருபத்தி ஆறாம்நாள் கைப்பிள்ளையைத் தூக்கிக் கொண்டு துணிமணிகளையும் சுருட்டி ஒரு பைக்குள் வைத்துக் கொண்டு கோவில் தாழ்விற்கு வந்து விட்டார் ராசாம்பாள" இவ்வாறான சூழ்நிலைகளில் சரியான முடிவெடுத்து மனதில் குழப்பமும் இன்றி தன்மானத்துடன் வாழலாம் என்று முடிவெடுக்கிறாள் (Tamilselvi, 2014a).

மணிமேகலையை செல்வராசு பார்க்க வருகிறான். வந்த இடத்தில் நீயும் வேலையில்லாமலும், மகள் இல்லாமலும் தனியாய் இருக்கிறாய். அதனால், என்னுடன் வந்துவிடு எனக் கூறுகிறான். ஏன் என்று கேட்டதற்கு,

இந்துரா மாசமாருக்கு என்றான். எனக்கு வேலயில்லங்குரதுக்காகவா சக்களத்தியாளுக்கு புளுக்க வேல செய்ய வரச் சொல்லுறியளா என்று கேட்பதிலிருந்து மணிமேகலையின் தன்மானம் வெளிப்படுகின்றது (Tamilselvi, 2014b).

கணவன் இல்லற தர்மத்தை மீறும் பொழுது பெண்ணிற்கு பூவும், பொட்டும் அவசியமில்லை. சுயமரியாதையும், சுதந்திரமும் அவசியம் என்பதைப் புரிந்துக் கொண்டு அவள், அக்குடும்பத்தை விட்டே வெளியேறுகிறாள்.

"இஞ்ச பாரு வூட்டுக்கு வா எல்லோரும் ஒன்னாவே இருப்ப முன்னு நாந்தான் ஒன்னயக் கூப்புடணும். நீ என்னய கூப்புடக் கொடாது. ஒம் புருசன் அவ்வொளுக்குச் சொந்தமான வூடுவாச நீங்களே இருந்துட்டுப் போங்க என்று சொன்னவள் விறுட்டென்று வேகமாய் நடந்தாள். அவளின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் ஓட்டமும் நடையுமாக பின்னாலேயே ஓடிவந்தாள் கலா"

என்ற வரிகளின் மூலம் தனக்குப் பின்னால் வந்தவள் தன்னை அழைப்பது தன்மானத்திற்கு இழுக்கு என நினைத்து குடும்பத்தை விட்டே வெளியேறுகிறாள் (Tamilselvi, 2014b). சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் இத்தகைய அநீதிகளை எதிர்கொள்ளும் நிலையில் உள்ளவர்கள் தன்மானத்துடன் வாழ முடிவு செய்தல் வேண்டும் என- ஆசிரியர் பதிவு செய்கின்றார்.

## மனவுறுதி

மனவுறுதி என்பது நாம் அடைய வேண்டிய விசயத்திற்கு நம் மனதைத் தயார்படுத்தும் வழியாகும். மனதில் உறுதி இருந்தால் மலையைக் கூட பெயர்த்த எடுத்துவிடலாம். மேலும், மனவுறுதி படைத்தவர்கள் எதிர்ப்பு, ஏளனம் கண்டு அச்சப்படாமல் எதிர்த்து முன்னேறிச் செல்வர். அதே போல்

மணிமேகலையும் மனவுறுதியுடன் தன் வாழ்க்கையை முன்னேற்றி விடலாம் என நினைத்துக் குடிகாரக் கணவனைத் திருமணம் செய்து அவன்படுத்தம் கொடுமைகளைச் சகித்துக் கொண்டு மனவுறுதியுடன் வாழ்கிறாள்.

நான் ராவோட ராவா எங்கப்பா வூட்டுக்கு ஓடிருப்பன்னு தான் நெனச்சிக்கிட்டு இருப்பாவொ. இருக்கட்டும். இனிமே செத்தாலும் இஞ்சகெடந்தே சாவணும். இல்லன்னா வேற எங்கயாச்சிம் போவணும். அப்பா வூட்டுப்பக்கம் அடியெடுத்துக் கொட வைக்கக் கொடாது வைராக்கியம் ஏற்பட்டது மனதில்"

என்ற வரிகளில் மணிமேகலையின் மனவுறுதி வெளிப்படுகின்றது. மேலும், செல்வராசு தன்னுடைய இரண்டாவது மனைவியை வீட்டிற்கு அழைத்த வந்து குடும்பம் நடத்தினான். அதில், தங்களுடன் மணிமேகலையையும் சேர்ந்து கொள்ளுமாறு இந்திரா அழைக்கவே, அவள் மனவுறுதியுடன் வேண்டாம் என மறுத்துரைத்தாள் (Tamilselvi, 2014b).

"வா போவம். மரம் வச்சவன் தண்ணி ஊத்தாமயாவ் பெயிருவான்? நம்மள படப்பிச்ச ஆண்டவன் ஏதாவது ஒருவழியக் காட்டாம பெயிட மாட்டான். வா" என்றுக் கூறி வீட்டை விட்டு வெளியேறுகிறாள் (Tamilselvi, 2014b).

## சகிப்புத்தன்மை

வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனுக்கு மிகவும் வேண்டிய ஒருகுணம் சகிப்புத் தன்மையாகும். நான் நானாக இருப்பதும், நீ நீயாக இருப்பதும் அதே நேரத்தில் ஒருவரை ஒருவர் அங்கீகரிப்பதும் ஏற்றுக் கொள்வதும் சகிப்புத் தன்மையாகும். மற்றவர்கள் அனைவரும் நம் விருப்பத்திற்கு ஏற்ப நடந்துக் கொள்ள வேண்டும் என நினைக்காமல், அவர்களுக்குரிய விருப்பத்திற்கு அவர்கள் இருப்பார்கள் என்று ஏற்றுக் கொண்டால் அது சகிப்புத்தன்மையாகும். பழி வாங்கும் உணர்வைக் கைவிட்டு பிறர் உணர்வை மதித்தலே சகிப்புத் தன்மை எனலாம்.

மணிமேகலை அவள் கணவன் செய்யும் அனைத்துக் கொடுமைகளையும் சகித்துக் கொண்டு வாழ்கிறாள். ஆனாலும், அவள் கணவன் அவள் மீது சிறிது கூட இரக்கமற்றவனாக இருக்கிறான். குடித்துவிட்டு வந்து அவளை அடிக்கிறான். மற்றொரு பெண்ணுடன் தொடர்பில் இருக்கிறான். இரண்டாம் திருமணம் செய்து வாழ்ந்த போதும் அவள் தன் கணவன் என அனைத்தையும் சகித்துக் கொண்டும், பொறுத்துக் கொண்டும் வாழ்கிறாள். இதனை, தலைமுடியைப் பிடித்த அழுத்தப் போட்டு அடித்து, கழுத்தில் கால்வைத்து

"மித்ததால் உடலெங்கும் வலித்தது"

"அடிஉதைத் தாங்க முடியாமல் சுருண்டு விழுந்தாள். செல்வராசுவிடமிருந்து அவளை விலக்கக் கூட யாரும் முன்வரவில்லை" என்ற வரிகள் செல்வராசு தன்னுடைய மனைவியை அடித்துத் துன்புறுத்துவதைக் காட்டுகிறது (Tamilselvi, 2014b)..

மணிமேகலையின் கணவன் திருமணத்திற்கு முன்பே அம்புசம் என்கிற பெண்ணுடன் தவறான உறவில் இருந்தான் அப்பெண்ணை விட்டு அவனால் வெளிவர இயலவில்லை.

"சாராயக் கடைக்கு போகும் பழக்கமேற்பட்ட சிறிது நாட்களிலேயே அம்புசத்தடனும் பழக ஆரம்பித்து விட்டான் செல்வராசு. தினமும் சாராயக்கடைக்கும் அம்புசத்தின் வீட்டிற்கும் போய் வந்துக் கொண்டிருந்தான் என்னயத்தான் நீங்க கட்டிக்கிடணும். என்னகிறந்தாலும் நாந்தா ஒங்களுக்குப் பொண்டாட்டி நீங்கதான் எனக்குப் புருஷன் இந்த வார்த்தைகளைச் செல்வராசின் காதில் தினந்தோறும் ஓதிக் கொண்டே இருந்தாள்."

என்று தவறான ஒழுக்கத்தில் இருந்தவனைத் திருத்த முயன்ற பெற்றோர், அவனுக்கு விருப்பமில்லாத பெண்ணைத் திருமணம் செய்து வைத்து அவள் வாழ்க்கையை நரகமாக்கினர் (Tamilselvi, 2014b).

வீட்டிற்கு வருமானம் ஈட்டித் தராத செல்வராசு தினமும் வீட்டில் கண் விழித்தவுடன் பற்ற வைக்க பீடி வாங்கி வைக்க வேண்டும் என்பான். மணிமேகலை தனக்கு இருந்த வேலையில் பீடி வாங்கி வைக்க மறந்து வேலைக்குச் செல்லும் போது காலை நீட்டி அவளைக் கீழே விழவைத்தான. அப்பொழுது அவள் வயிற்றில் இருந்த ஐந்து மாதக் கருவும் களைந்தது. இதனை,

"நடுவீட்டில் படுத்திருந்தவனை வேகமாய் கடந்துப் போகும் நேரத்தில் கால்களைத் தட்டி விட்டான். நிலைத் தடுமாறிய மணிமேகலை தன் மேடிட்ட வயிறு சரியாக நிலைப்படிக் கட்டையில் படீர்ரென்று மோத திண்ணைப் பக்கம் தலையும், நடுவீட்டில் காலுமாக நிலையின் குறுக்கே விழுந்தாள். விழுந்த அதிர்வில் அவளுக்கு நிதானம் இல்லாமல் போய்விட்டது. அவசரத்திற்கு வந்து உதவக் கூட அக்கம் பக்கத்தில் யாரும் இல்லை. சாவகாசமாய் எழுந்து செல்வராசு திண்ணையில் அவளை இழுத்துப் போட்டுவிட்டு அவளுடைய அம்மாவிற்கு ஆள் அனுப்பினான். பாக்கியம் வந்து பார்த்த போது இடுப்பிற்குக்க கீழே, கட்டியிருந்த துணிமணிகள் தொப்பலாய் ரத்தத்தில் நனைந்து போயிருந்தது.

அஞ்சி மாத்த புள்ள ஆவாம பெயிட்டு. அதான் இவ்வளவு கேடுபாடா போயிகெடக்கு நம்ம பொண்ணு"

என்ற வரிகள் தன்மனைவியின் கருவைக் களைத்தது மட்டுமில்லாமல் அவள்படும் துயரத்தைக் கண்டும் மனம் இரங்காத கல்நெஞ்சம் படைத்த கணவனாக இருந்த போதும், அவனின் செயலைப் பொறுத்துக் கொண்டு அவனுடன் குடும்பம் நடத்தினாள் (Tamilselvi, 2014b).

## முடிவுரை

பெண்ணுக்கு ஆளுமைத்திறன் உண்டு என்பது புதிய கருத்தன்று பழைய கருத்தாகும். இக்காலப்பெண்ணியத்தின் தோற்று வாய்க்கான வித்து சங்க காலத்திலேயே இருந்தது. அளம், கற்றாழை புதினத்தில் சுந்தராம்பாள் மற்றும் அவரது மூன்று பெண் குழந்தைகளின் ஆளுமைத்திறனானது அவர்களுடைய கிராமத்தில் பெண்கள் தனித்து நின்று தங்களது சொந்த முயற்சியின் பயனால் தங்களுக்குத் தேவையான பொருளாதார சுதந்திரத்தை அடைய அவர்களின் ஆளுமைப் பண்பு தூண்டுகோலாக அமைந்தது என்பதை இக்கட்டுரையின் மூலமாக அறிய முடிகின்றது. மணிமேகலை குடிகார கணவனைத் திருமணம் செய்து, அவன் செய்யும் கொடுமைகளையும் தாங்கி, அவனை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற மன உறுதியுடனும் தன்மானம் மிக்கவளாகவும் திகழ்வதை ஆசிரியர் பதிவு செய்கிறார்

## References

Bharani, S. (2009) Ulaviyal Nokkil Thiruvasagam, Nam Tamilar Pathippagam, Chennai, India.

Tamilselvi, S. (2014a) Alam, New century Book house, Chennai, India.

Tamilselvi, S. (2014b) Katrazhai, New century Book house, Chennai, India.

TVK, (1972) Kalaikalanchiyam Thoguthi 1, Tamil Valarchi Kalagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License